# திம்மாவிலிருந்து விடுதலை பெறுவதற்கான ஜெபம்

பிதாவே, நான் இனி பயப்படமாட்டேன், இப்போது நான் உம் அன்பின் பிள்ளை என்று நீர் சொல்வதை நான் ஏற்றுக் கொள்கிறேன். முஹம்மது கற்பித்த இஸ்லாத்தின் கோரிக் கைகளை நான் புறக்கணித்து, தள்ளுகிறேன். "குர்ஆனின் அல்லாஹ்" மேலான சகலவித அர்ப்பணிப்புகளையும் புறக் கணிப்பதாக அறிவிக்கிறேன்; இனிமேல் எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை மட்டுமே வணங்குவேன் என்று அறிவிக்கிறேன்.

**திம்மா** ஒப்பந்தத்திற்கும் அதன் கொள்கைகளுக்கும் கீழ்ப் படிந்ததன்மூலம் எங்கள் முன்னோர் செய்த பாவங்களி லிருந்து மனந்திரும்புகிறேன்; அவர்களுடைய பாவங்களுக் காக உம்மிடம் மன்னிப்பு கேட்கிறேன்.

இஸ்லாத் சமூகத்திற்கும் அதன் கொள்கைகளுக்கும் அர்ப் பணிப்பதாக நானோ எங்கள் மூதாதையர்களோ செய்த அனைத்து ஒப்பந்தங்களையும் புறக்கணித்து, கடிந்துகொள் கிறேன்.

நான் **திம்மாவையும்** அதன் ஒவ்வொரு நிபந்தனைகளையும் முற்றிலுமாகப் புறக்கணிக்கிறேன். **ஜிஸ்யா** கட்டணச் சடங் கின்படி கழுத்தின் அடையாளமாக அடிக்கப்பட்டதையும், அது சம்பந்தப்பட்ட அனைத்தையும் புறக்கணிக்கிறேன். அந் தச் சடங்கு சுட்டிக்காட்டின சிரச்சேத சாபத்தையும் மரணத் தையும் குறிப்பாகப் புறக்கணிக்கிறேன்.

**திம்மா** ஒப்பந்தம் கிறிஸ்துவின் சிலுவையில் அறையப் பட்டதென அறிவிக்கிறேன். திம்மா ஒரு பொதுவான காட்சிப் பொருளாக மாறிவிட்டது; அதற்கு என்மேல் எந்த உரிமையும் இல்லை. திம்மா ஒப்பந்தத்தின் ஆன்மீக கொள்களைகள் வெளியரங்கமாகிவிட்டன, பெலவீனமாக்கப்பட்டன, தோற் கடிக்கப்பட்டன, கிறிஸ்துவின் சிலுவையால் அவமாக்கப்பட் டன என்று அறிவிக்கிறேன்.

இஸ்லாத்திற்கு நன்றிகடன்பட்டிருப்பதாகச் சொல்லுகிற பொய்ப் போதனைகளைப் புறக்கணிக்கிறேன்.

பொய்யான குற்றவுணர்வுகளைப் புறக்கணிக்கிறேன். வஞ்ச கத்தையும் பொய்களையும் புறக்கணிக்கிறேன்.

கிறிஸ்துவுக்குள்ளான என் விசுவாசத்தை வெளியே பேசக் கூடாதென சொல்கிற அனைத்து உடன்படிக்கைகளையும் புறக்கணிக்கிறேன்

**திம்மா** அல்லது இஸ்லாத் குறித்துப் பேசக்கூடாதெனச் சொல் கிற அனைத்து உடன்படிக்கைகளையும் புறக்கணிக்கிறேன்.

நான் பேசுவேன், அமைதியாக இருக்கமாட்டேன்.

"சத்தியம் என்னை விடுதலையாக்கும்" என்பதை அறிவிக் கிறேன் (யோவான் 8:32); கிறிஸ்து இயேசுவில் விடுதலை பெற்றவனாக வாழத் தீர்மானிக்கிறேன்.

இஸ்லாத்தின் பெயரால் எனக்கும், என் குடும்பத்திற்கும் எதி ராகப் பேசப்பட்டுள்ள சகல சாபங்களையும் ரத்துசெய்து, புறக்கணிக்கிறேன்.

என் மூதாதையர்களுக்கு எதிராகச் சொல்லப்பட்ட சகல சாபங் களையும் ரத்துசெய்து, புறக்கணிக்கிறேன். குறிப்பாக மரண சாபத்தை முறித்து, புறக்கணிக்கிறேன். மரணமே, உனக்கு என்மேல் அதிகாரமில்லை!

இந்தச் சாபங்களுக்கு என்மேல் எந்த அதிகாரமுமில்லை என்று அறிவிக்கிறேன். கிறிஸ்துவின் ஆசீர்வாதங்களை என் ஆவிக் குரிய சுதந்தரமாக உரிமைகோருகிறேன்.

பயத்தைப் புறக்கணிக்கிறேன். கிறிஸ்து இயேசுவில் தைரிய மாக இருக்கத் தீர்மானித்துள்ளேன்.

சூழ்ச்சித்திறன் செய்தலையும் கட்டுப்படுத்துவதையும் புறக் கணிக்கிறேன்.

அத்துமீறலையும் வன்முறையையும் புறக்கணிக்கிறேன்.

பயத்தைப் புறக்கணிக்கிறேன். புறக்கணிக்கப்படுவோமோ என்கிற பயத்தைப் புறக்கணிக்கிறேன். என் சொத்தையும் உடைமைகளையும் இழந்துவிடுவேனோ என்கிற பயத்தைப் புறக்கணிக்கிறேன். வறுமை பயத்தைப் புறக்கணிக்கிறேன். அடிமைப்படுத்தப்படுவேனோ என்கிற பயத்தைப் புறக்கணிக் கிறேன். பலாத்காரப் பயத்தைப் புறக்கணிக்கிறேன். தனி மைப்படுத்தப்படுவேனோ என்கிற பயத்தைப் புறக்கணிக் கிறேன். என் குடும்பத்தை இழந்துவிடுவேனோ என்கிற பயத்தைப் புறக்கணிக்கிறேன். கொல்லப்படுதல், சாவு குறித்த பயத்தைப் புறக்கணிக்கிறேன்.

இஸ்லாத்குறித்த பயத்தைப் புறக்கணிக்கிறேன். இஸ்லாமியர் கள்குறித்த பயத்தைப் புறக்கணிக்கிறேன்.

பொது நடவடிக்கைகளில் அல்லது அரசியல் நடவடிக்கை களில் ஈடுபடுவேனோ என்கிற பயத்தைப் புறக்கணிக்கிறேன்.

இயேசு கிறிஸ்துவே சகலத்திற்கும் ஆண்டவர் என்று அறிக் கையிடுகிறேன்.

இயேசுவே என் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதிக்கும் ஆண்ட வர் என்று அவருக்கு அடிபணிகிறேன். இயேசு கிறிஸ்துவே என் குடும்பத்திற்கு ஆண்டவர். இயேசு கிறிஸ்துவே என் நகரத்திற்கு ஆண்டவர். இயேசு கிறிஸ்துவே என் தேசத்திற்கு ஆண்டவர். இயேசு கிறிஸ்துவே இந்தத் தேசத்திலுள்ள சகல மக்களுக்கும் ஆண்டவர். இயேசு கிறிஸ்துவே என் ஆண்ட வர் என்று என்னை அர்ப்பணிக்கிறேன்.

நிந்திக்கப்படுவதைப் புறக்கணிக்கிறேன். கிறிஸ்து என்னை ஏற்றுக்கொண்டுள்ளார் என்று அறிவிக்கிறேன். அவரை மட் டுமே சேவிக்கிறேன்.

அவமானத்தைப் புறக்கணிக்கிறேன். சிலுவைமூலம் சகல பாவங் களிலிருந்தும் சுத்திகரிக்கப்பட்டிருக்கிறேன் என்று அறிவிக்கி றேன். அவமானத்திற்கு என்மேல் எந்த உரிமைகளும் இல்லை; நான் கிறிஸ்துவோடு மகிமையில் அரசாளுவேன்.

ஆண்டவரே, இஸ்லாமியர்கள் மேலான சகல வெறுப்பு களுக்காகவும் என்னையும் என் மூதாதையர்களையும் மன்னி யும். இஸ்லாமியர்களுக்கு

எதிராகவும் மற்றவர்களுக்கு எதிரா கவும் இருக்கிற வெறுப்பை நிராகரிக்கிறேன். இஸ்லாமியர் களையும் இந்தப் பூமியின்மேல் உள்ள எல்லா மனிதர்களை யும் நேசிப்பதாக அறிவிக்கிறேன்.

திருச்சபையின் பாவங்கள் மற்றும் திருச்சபை தலைவர் களுக்கு தவறான வகையில் கீழ்ப்படிந்த பாவங்கள் ஆகிய வற்றிலிருந்து மனந்திரும்புகிறேன்.

ஒதுக்கிவைக்கப்படுகிற நிலையைப் புறக்கணிக்கிறேன். நான் மன்னிக்கப்பட்டேன், கிறிஸ்துவுக்குள் தேவன் என்னை ஏற்றுக் கொண்டார் என்று அறிக்கையிடுகிறேன். நான் தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டுள்ளேன். தேவனுடைய சிங்காசனத்திற்கு முன் வானத்திலும் அல்லது பூமியிலும் எந்த வல்லமையும் எனக்கு எதிராக எந்தக் குற்றச்சாட்டையும் வைக்கமுடியாது.

நம் பிதாவாகிய தேவனுக்கும், என் ஒரே இரட்சகரான கிறிஸ்து வுக்கும், என்க்கு ஜீவனைத் தர வல்லவரான பரிசுத்த ஆவிக் கும் என் துதியையும் ஸ்தோத்திரத்தையும் அறிவிக்கிறேன்.

இயேசு கிறிஸ்துவே ஆண்டவரென்பதற்கு உயிருள்ள சாட்சி யாக வாழ என்னை அர்ப்பணிக்கிறேன். அவருடைய சிலு வையைக் குறித்து வெட்கப்படேன். அவருடைய உயிர்த் தெழுதலைக் குறித்து வெட்கப்படேன்.

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோருடைய தேவனா கிய ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளை நான் என்று அறிக்கை யிடுகிறேன்.

தேவனுக்கும் அவருடைய மேசியாவுக்குமே வெற்றி என அறிக்கையிடுகிறேன். பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்துவே ஆண்டவர் என்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும், முழங்கால்கள் யாவும் முடங்கும் என்று அறிக்கையிடுகிறேன்.

திம்மி அடிமைத்தன முறையில் பங்காற்றுகிற இஸ்லாமியர் களை மன்னிப்பதாக அறிவிக்கிறேன்.

பிதாவாகிய தேவனே, திம்மாவிலிருந்தும், திம்மி அடிமைத் தன மனநிலையிலிருந்தும், திம்மா ஒப்பந்தத்துடன் சம்பந்தப் பட்ட அவபக்தியான ஒவ்வொரு நியதிகளிலிருந்தும் தயவு செய்து என்னை விடுவியும்.

நீர் என்னை பரிசுத்த ஆவியால் நிரப்பவும், இயேசு கிறிஸ்து வினுடைய ராஜ்யத்தின் சகல ஆசீர்வாதங்களையும் என் மேல் பொழியவும் இப்போது கேட்கிறேன். உம் வார்த்தை யின் சத்தியத்தை தெளிவாக விளங்கிக்கொள்ளவும், என் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் அதைப் பயன்படுத் தவும் எனக்கு கிருபை தாரும். நீர் வாக்களித்தபடியே நம்பிக் கையும் ஜீவனும் நிறைந்த வார்த்தைகளை எனக்கு அருளி யரும்; அவற்றை அதிகாரத்தோடும் இயேசுவின் நாமத்தில் வல்லமையோடும் மற்றவர்களிடம் பேசும்படி என் உதடு களை ஆசீர்வதியும். கிறிஸ்துவுக்கு உண்மையுள்ள சாட்சி யாக இருப்பதற்கான தைரியத்தைத் தாரும். இஸ்லாமிய மக் கள்மேல் ஆழமான அன்பையும் அவர்களோடு கிறிஸ்து வின் அன்பைப் பகிர்ந்துகொள்வதற்கான ஆர்வத்தையும் எனக்குத் தாரும்.

என் ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் இவற்றை அறிக்கையிட்டு, கேட்கிறேன். ஆமென்.